விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–03.41 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –04.20 p.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

## Case No : CC.No.632/2024

**Petitioner side witness : ம.சா.1** **Date :** 21.03.2025

| | |
|---|---|
| **Name : தமிழரசு** | **Taluk : மேட்டுர்** |
| **Father Name : விஸ்வநாதன்** | **Calling : காண்டராக்டர்** |
| **Village : தூக்கணாம்பட்டி** | **Age :** 56 |

(Petitioner present. Accused absent filed petition and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரி எந்த வகையில் பழக்கம் என்றால் குடும்பம் நண்பர். எதிரியின் எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பசங்க ஒரு பெண் குழந்தை உள்ளனர். அவர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ஏஜெண்ட் தொழில் செய்கிறார் என்றும் ஏஜெண்ட் என்றால் என்ன ஏஜெண்ட் என்றால் தாலுகா அலுவலகத்தில் பட்டா மாற்றி தருவது, சான்றிதழ் வாங்கி தருவது மற்றும் லோன் வாங்கி தருகிறார். லோன் வாங்கி தருவது நான் கேள்வி தான் பட்டுள்ளேன். தூக்கணாம்பட்டியின் கிழக்கில் எனக்கு சொந்தமான விடு உள்ளது. அந்த வீடு 1997, 1998 ம் ஆண்டு கட்டினேன். இது தவிர எனக்கும் எனது மனைவிக்கு வேறு வீடுகள் மற்றும் நிலங்கள் இல்லை என்றால் சரியல்ல. என் மனைவிக்கு சங்ககிரி வீடு உள்ளது. தூக்கணாம்பட்டியில் உள்ள வீட்டிற்கு லோன் வாங்கவில்லை. சங்ககிரியில் உள்ள அப்பார்ட்மண்ட் வீட்டிற்கு லோன் வாங்கி தான் கட்டினேன். லட்சுமி விலாஸ் வங்கியில் லோன் வாங்கி அப்பார்ட்மண்ட் வீட்டை வாங்கினேன். தற்போது லட்சுமி விலாஸ் வங்கி கனரா

வங்கியுடன் இணைக்கப்பட்டது. இது தவிர்த்து சேலம் கேம்ப் உள்ள அம்பேத்கர் சொசைட்டியில் லோன் வாங்கவில்லை என்றால் சரிதான். நான் கட்டிக்கொடுத்த 100 பீல்டிங்களுக்கும் அம்பேத்கர் சொசைட்டியில் லோன் வாங்கி தரவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு ரூ.8 லட்சம் தவிர எந்த தொகையும் தரவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் 1 காசோலை கொடுத்தார். சங்ககிரியில் உள்ள லட்சுமி விலாஸ் வங்கியில் எத்தனை லட்சத்திற்கு லோன் வாங்கினேன் என்றால் ரூ.10 லட்சத்திற்கு லோன் வாங்கினேன். லோன் வாங்குவதற்கு எந்த ஆவணம் கொடுத்து லோன் வாங்கினேன் என்றால் Legal, Plan approval, Panel engineer ஆவணங்களை கொடுத்து தான் லோன் வாங்கினேன். எதிரி கொடுத்த காசோலை எண் என்ன என்றால் காசோலை எண்.656748, தேதி 25.09.2024 கனரா வங்கி காசோலை ஆகும். அதே கனரா வங்கியின் காசோலை எண்.677126 எதிரியின் நிரப்பப்பட்ட காசோலை என்னிடம் இல்லை என்றால் சரிதான். எதிரி குடும்ப நண்பர் என்ற நான் முறையில் மேற்கண்ட காசோலை குறித்து பஞ்சாயத்து வைத்து பேசினேனா என்றால் பேசவில்லை. உடனடியாக நான் வழக்கு தாக்கல் செய்தேன். தூக்கணாம்பட்டி காளியம்மன் கோயில் நிர்வாகி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தூக்கணாம்பட்டி காளியம்மன் கோயில் நிர்வாகி மாதையன்குட்டை ராஜாஜி நகரில் வசிக்கும் மூர்த்தி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட கோயிலில் நான் கானியாச்சியாக இருக்கிறேன். மேற்கண்ட மூர்த்தி என்பவர் எதிரியிடம் நான் ரூ.1 லட்சம் மட்டும் தான் கொடுத்து அதற்கு ஆதரவாக 2 காசோலைகளை பெற்றுள்ளதாகவும் தற்போது எதிரி மேற்கண்ட தொகையை கொடுக்க தயாராக உள்ளதால் எதிரியிடமிருந்து நான்

ஆதராமாக பெற்ற 2 காசோலைகளை கொடுப்பதற்காக என்னிடம் பேசினாரா என்றால் என்னிடம் எதும் பேசவில்லை. அவரும் என்னிடம் கேட்கவில்லை. நானும் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னுடைய வங்கி கணக்கும் எதிரியின் வங்கி கணக்கு ஒரே வங்கியில் உள்ளது என்றால் சரிதான். 10.10.2024 ம் தேதி எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். மேற்கண்ட தேதிக்கு பின்னிட்டு எதிரியும், மூர்த்தியும் என்னிடம் வந்து வழக்கறிஞர் அறிவிப்பு ஏன் அனுப்புனீர்கள் எதிரி என்னிடம் கைமாற்றாக பெற்ற ரூ.1 லட்சம் மட்டும் கொடுத்துவிடுவதாக கூறி ஏன் அறிவிப்பு அனுப்புனீர்கள் என்று கேட்டார்களா என்றால் இல்லை. நான் வருவான வரி கணக்கு செலுத்தி வருவதால் மேற்படி காசோலையை தொழில் நஷ்ட கணக்கு காட்ட அறிவிப்பு அனுப்பி வழக்கு தாக்கல் செய்து பிறகு முடித்துக்கொள்ளலாம் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.1 ஆவணம் தான் தாக்கல் செய்த ஆவணம் ஆகும். ம.சா.1 ஆவணத்தில் முதலில் ரூ.3 லட்சம் என்று எழுதப்பட்டு பின்னர் அதை திருத்தத்துடன் ரூ.8 லட்சமாக திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி தாமதாமாக தெரிந்துக்கொண்டு மூர்த்தி என்ற நபரை அழைத்து வந்து எனது வீட்டில் பஞ்சாயத்து செய்தார் என்றால் சரியல்ல.

<u>மேலும் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.</u>

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1**
**மேட்டுர்.**